# “பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களை பள்ளி வளர்ச்சிக்கு முழுமையாக பயன்படுத்தும் திறன்களை தலைமையாசிரியர்களிடம் மேம்படுத்துதல்”


ஆய்வாளர்

முனைவர் கி.கலைவாணன் எம்.ஏ.எம்.ஏ., எம்.எட்., எம்.பில்., பி.எச்டி.,

தமிழ் விரிவுரையாளர்

மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும்

பயிற்சி நிறுவனம்

உத்தமசோழபுரம்

சேலம் – 636 010


செயலாராய்ச்சி ஒப்படைப்பு

மாநிலக்கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்

பயிற்சி நிறுவனம் – 600 006

முனைவர் A.ரமேஷ் M.Sc., M.Ed., M.Phil., Ph.D.,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும்
பயிற்சி நிறுவனம்
உத்தமசோழபுரம்
சேலம் – 636 010

# சான்றிதழ்

“பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களை பள்ளி வளர்ச்சிக்கு முழுமையாக பயன்படுத்தும் திறன்களை தலைமையாசிரியர்களிடம் மேம்படுத்துதல்” என்ற தலைப்பில் 2023 – 2024க்கான செயலாய்வினை நிறுவன தமிழ் விரிவுரையாளர் முனைவர் கி.கலைவாணன் எம்.ஏ.எம்.ஏ., எம்.எட்., எம்.பில்., பி.எச்டி., அவர்களால் என் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்டது எனச் சான்றளிக்கப்படுகிறது.

இடம் : உத்தமசோழபுரம்

நாள் :

முனைவர் கி.கலைவாணன் எம்.ஏ.எம்.ஏ., எம்.எட்., எம்.பில்., பி.எச்டி.,
தமிழ் விரிவுரையாளர்
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும்
பயிற்சி நிறுவனம்
உத்தமசோழபுரம்
சேலம் – 636 010

## ஆய்வாளர் உறுதிமொழி

‘‘பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களை பள்ளி வளர்ச்சிக்கு முழுமையாக பயன்படுத்தும் திறன்களை தலைமையாசிரியர்களிடம் மேம்படுத்துதல்’’ என்ற தலைப்பில் 2023 – 2024க்கான இச்செயலாராய்ச்சி ஆய்வேடு எனது சொந்த முயற்சியில் உருவானதேயாகும். இதற்கு முன்பு இத்தலைப்பில் இக்கருத்துகளில் செயலாய்வில் ஈடுபட்டு ஆய்வேடு அளிக்கப் பெறவில்லை என்றும் உறுதியளிக்கிறேன்.

இடம் : உத்தமசோழபுரம்

நாள் :

## நன்றியுரை

2023 – 2024 கல்வியாண்டின் செயலாராய்ச்சி மேற்கொள்ள நிதியுதவி வழங்கிய சென்னை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர், இணை இயக்குநர்கள் மற்றும் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயக்குநரின் பரிந்துரையை உடனே ஏற்று இச்செயலாராய்ச்சியை மேற்கொள்ள ஆக்கமும் ஊக்கமும் அளித்த மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாய்வினை மேற்கொள்ள பல்வேறு நிலைகளில் எனக்கு ஆலோசனைகள் மற்றும் உதவி புரிந்த எம் நிறுவன முதல்வர் மற்றும் கல்வியாளர்களுக்கும் இவ்வாய்வினை மேற்கொண்டு ஆய்வு செய்வதற்கு உறுதுணையாக இருந்த கெங்கவல்லி ஒன்றிய அனைத்து தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் அனைவருக்கும் என் உளமார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

இவண்

கி. கலைவாணன்.

## பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 1 | ஆய்வு முன்னுரை | 6 |
| 2 | பள்ளி மேலாண்மைக் குழு தேவை ஏன் | 7 |
| 3 | பள்ளி மேலாண்மைக் குழு அமைப்பு, விதிமுறை | 8 |
| 4 | பள்ளி மேலாண்மைக் குழுவின் நோக்கம் | 10 |
| 5 | பள்ளி மேலாண்மைக் குழுவின் முக்கியத்துவம் | 10 |
| 6 | பள்ளி மேலாண்மைக் குழு கண்காணிக்க வேண்டியவை | 11 |
| 7 | பள்ளி மேலாண்மைக் குழுவின் பணிகள் | 12 |
| 8 | பள்ளி மேம்பாட்டுத்திட்டம் | 14 |
| 9 | ஆய்வின் தேவை | 15 |
| 10 | ஆய்வின் குறிக்கோள் | 16 |
| 11 | பிரச்சனையைக் கண்டறிதல் | 17 |
| 12 | பிரச்சனையை வரையறுத்தல் | 17 |
| 13 | பிரச்சனையை பகுத்தாய்தல் | 17 |
| 14 | பிரச்சனைக்குரிய உத்தேசக் காரணங்கள் | 18 |
| 15 | கருதுகோள்கள் | 19 |
| 16 | ஆய்வு மாதிரி | 20 |
| 17 | ஆய்வு வடிவம் | 21 |
| 18 | செயல்பாடுகளைத் திட்டமிடுதல் | 21 |
| 19 | இடையீட்டு நிகழ்வு | 22 |
| 20 | நுட்பங்கள் | 23 |
| 21 | தலைமையாசிரியர்கள் திறன் வளர்த்தல் பயிற்சி | 23 |
| 22 | விவர சேகரிப்பும், பகுப்பாய்வும் | 26 |
| 23 | அட்டவணை | 27 |
| 24 | ஆய்வு முடிவு | 28 |
| 25 | பரிந்துரைகள் | 29 |
| 26 | ஆய்வில் துணைநின்ற நூல்கள் | 30 |
| | **பின் இணைப்புகள்** | |
| 1 | முன், பின் தேர்வு மதிப்பெண் பட்டியல் | 31 |
| 2 | முன், பின் தேர்வு ஓர் ஒப்பீடு | 32 |
| 3 | ஆசிரியர்களிடையேயான முன், பின் தேர்வு வேறுபாடு | 33 |
| 4 | அடைவுத்திறன் – ஓர் ஒப்பீடு | 34 |
| 5 | செயலாய்வு தொடர்பான புகைப்படத்தொகுப்பு | 35 |
| 6 | முன்தேர்வு / பின் தேர்வு வினாத்தாள் | 50 |

# “ பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களை பள்ளி வளர்ச்சிக்கு முழுமையாக பயன்படுத்தும் திறன்களை தலைமையாசிரியர்களிடம் மேம்படுத்துதல்”

**1. அறிமுகம் / முன்னுரை :**

சமூகமும், பெற்றோர்களும், ஆசிரியர்களும் இணைந்துதான் ஓர் வளமான, நலமான மாணவ சமூகத்தை உருவாக்க முடியும் குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உயிர்நாடியாக விளங்குவது கல்வி ஒன்றேதான்.

கல்வியைக் குழந்தைகள் எவ்விதத் தடைகளும், பாகுபாடுகளுமின்றிப் பெறக் கல்வித்துறையும், சமூகமும் இணைந்து செயல்பட வேண்டியது அவசியமாகிறது. ஆகவே, நாம் அனைத்து வகை பள்ளிகளிலும் பெற்றோர்களும், ஆசிரியர்களும், சமூகமும் இணைந்துப் பள்ளியை நேசிக்கும் ஒரு குழுவை உருவாக்க வேண்டும்.

பள்ளியின் வளர்ச்சியில், முன்னேற்றத்தில் கவனம் கொள்ளவும், மேலாண்மை செய்யவும் இக்குழு அவசியமாகிறது. குழுவின் உறுப்பினர்கள் ஒன்று கூடிப் பள்ளியில் என்ன செய்ய வேண்டும். எப்படிச் செய்ய வேண்டும். எப்பொழுது செய்யவேண்டும் என்பதை முடிவு செய்வதில் இந்த குழு முக்கியப் பங்கு வகிக்கிறது.

இதைத்தான் "குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 ம்" ஒவ்வொருப் பள்ளியிலும் பள்ளியின் ஒட்டுமொத்த வளர்ச்சியை திட்டமிட்டு நடைமுறைப் படுத்தி அதை மேலாண்மை செய்ய பெற்றோர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட 20 பேர்கள் கொண்ட ஒரு பள்ளி மேலாண்மைக் குழுவை அமைக்கவேண்டும் என வலியுறுத்துகிறது.

பள்ளி மேலாண்மைக் குழு என்பது பள்ளியின் முன்னேற்றத்திற்காகவும், பள்ளியின் செயல்பாடுகளை மேலாண்மை செய்வதற்காகவும், பள்ளிகளின் வளர்ச்சியில் சமூகத்தின் பங்களிப்பை உறுதி செய்வதற்காகவும், இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009ன் படி ஏற்படுத்தப்பட்ட குழு ஆகும் குழந்தைகளின் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சித் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் உள்ளிட்டோர் மேலாண்மைக் குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.

**2.பள்ளி மேலாண்மைக் குழு தேவை ஏன் ?:**

கல்வி,

- சமூகத்தை வழி நடத்துவது
- குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியின் உயிர்நாடி
- குழந்தைகளின் உரிமைகளில் தலையானது
- அத்தகைய கல்வியை குழந்தைகள் பெற
- சமூகமும், பெற்றோர்களும், ஆசிரியர்களும் இணைந்து ஒரு குழுவை உருவாக்க வேண்டும்.

இந்தக் கல்வியை கொடுக்கும் நமது பள்ளியின் ஒட்டுமொத்த வளர்ச்சியை மேலாண்மை செய்ய ஒரு குழு தேவை. அந்த குழுதான் "பள்ளி மேலாண்மைக் குழு"

**3.பள்ளி மேலாண்மைக் குழு அமைப்பு, விதிமுறை:**

**3.1 அமைப்பு:**

பள்ளி மேலாண்மைக் குழுவில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் சமூகத்தின் பிரதிநிதிகள் அடங்குவர். மேலும் பள்ளி நிர்வாகம் மற்றும் பள்ளி வளர்ச்சிக்கான திட்டங்களை உருவாக்கவும் செயல்படுத்தவும் அவர்கள் பொறுப்பு வகிக்கிறார்கள்.

| வ. எண். | வகை | எண்ணிக்கை | பதவி | முன்னுரிமை |
|---|---|---|---|---|
| 1 | பெற்றோர் (பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்) | 1 | தலைவர் | பெண் |
| 2 | சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தையின் பெற்றோர் | 1 | துணைத் தலைவர் | |
| 3 | தலைமையாசிரியர் | 1 | வழிகாட்டுபவர் | பெண் |
| 4 | ஆசிரியர் | 1 | உறுப்பினர் | பெண் |
| 5 | பெற்றோர் (நலிவடைந்த மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினர் உட்பட) | 12 | உறுப்பினர் | பெண்–7 |
| 6 | மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூர் உறுப்பினர் | 2 | உறுப்பினர் | பெண்–1 |
| 7 | கல்வியாளர்/புரவலர்/ தன்னார்வ அமைப்பினர் / ஓய்வுபெற்ற அலுவலர் | 1 | உறுப்பினர் | |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | பெற்றோர் (சுய உதவிக்குழு உறுப்பினர்) | 1 | உறுப்பினர் | பெண் |
| | மொத்த உறுப்பினர்கள் | 20 | | |

**3.2.விதிமுறை:**

- பள்ளியின் தலைமை ஆசிரியர் குழுவின் ஒருங்கிணைப்பாளராக இருப்பார்.
- பள்ளி மேலாண்மைக் குழு அந்த பள்ளியில் படிக்கும் மாணவரின் பெற்றோர் ஒருவர் தலைவராக இருப்பார்.
- உறுப்பினர்களில் 50 சதவிகிதம் பெண்கள் இருக்க வேண்டும்.
- குழு உறுப்பினர்கள் வாரத்திற்கு ஒருமுறையாவது வருகை தந்து பார்வையிட வேண்டும்.
- மாதம் ஒரு முறை சந்தித்து, ஆலோசனைக் கூட்டம் நடத்த வேண்டும்.
- கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகளை தீர்மானங்களாக நிறைவேற்ற வேண்டும். அவற்றை நடைமுறைப்படுத்த அரசு உதவி, தன்னார்வலர்களின் உதவி, தங்களின் பங்களிப்பு என முயற்சிக்க வேண்டும்.
- பள்ளி மேலாண்மைக் குழுவின் கூட்ட நிகழ்வுகள், தீர்மானங்கள் குறித்து தனி பதிவேடுகளை பராமரிக்கப்பட வேண்டும்.

- இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை குழு மாற்றியமைக்கப்பட வேண்டும்.

**4. பள்ளி மேலாண்மைக் குழுவின் நோக்கம்:**

- பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தில் பள்ளியின் தற்போதைய நிலை, ஆசிரியர்களின் வருகை, கற்பித்தல், தேவையான வசதிகள் குறித்து ஆலோசித்தல்.
- பள்ளியின் கல்வித் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளை மேம்படுத்துதல்.
- பள்ளிக்கான நிதி மேலாண்மை மற்றும் வளங்களை திறம்பட பயன்படுத்துதல்.
- பள்ளியின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.
- மாணவர்களின் கற்றல் சூழலை மேம்படுத்துதல்.
- பெற்றோர்– ஆசிரியர் கலந்தாய்வுகளை ஊக்குவித்தல்.
- சமூகத்தின் பங்களிப்பை ஊக்குவித்தல்

**5. பள்ளி மேலாண்மைக் குழுவின் முக்கியத்துவம்:**

- கல்வித் தரத்தை மேம்படுத்துதல்
- மாணவர்களின் பங்களிப்பை அதிகரித்தல்
- பெற்றோர்– ஆசிரியர் உறவை வலுப்படுத்துதல்
- பள்ளிச் சூழலை மேம்படுத்துதல்
- சமூகத்தின் ஆதரவைப் பெறுதல்

## 6. பள்ளி மேலாண்மைக் குழு கண்காணிக்க வேண்டியவை:

| வ. எண் | கண்காணிக்க வேண்டிய அம்சங்கள் | பதிவேடுகள் |
|---|---|---|
| 1 | ஆசிரியர் வருகை | வருகைப் பதிவேடுகள் / அனுமதிப் பதிவேடு |
| 2 | உள்கட்டமைப்பு | உள்கட்டமைப்பு தொடர்பான பதிவேடுகள் |
| 3 | மாணவர் வருகை சேர்க்கை | மாணவர் சேர்க்கை நீக்கல் பதிவேடு மற்றும் சான்றிதழ் பதிவேடு |
| 4 | கற்பித்தல் | பாடக் குறிப்பேடு |
| 5 | மதிப்பீடு | CCE பதிவேடு |
| 6 | அரசின் நலத்திட்டங்கள் மற்றும் மதிய உணவுத் திட்டம் | பொருள்கள் பதிவுப் பதிவேடு, மதிய உணவு தொடர்பான பதிவேடுகள் |
| 7 | உதவித்தொகை | உதவித்தொகைப் பதிவேடு |
| 8 | இடைநின்ற மாணவர்கள் கண்காணிப்பு | இடைநின்ற மாணவர்கள் பதிவேடு |
| 9 | பாகுபாடில்லாத வகுப்பறை | வகுப்பறைக்குச் சென்று பார்க்கலாம் அல்லது மாணவர்களிடம் கலந்துரையாடித் தெரிந்துகொள்ளலாம் |
| 10 | மாணவர்கள் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் | பள்ளி வளாகத்தைப் பார்வையிட்டு தெரிந்துகொள்ளலாம் |

## 7.பள்ளி மேலாண்மைக் குழுவின் பணிகள்

1. பள்ளியைச் சுற்றியுள்ளக் குடியிருப்புப் பகுதிகளிலிருந்துப் பள்ளி வயதுக் குழந்தைகளைப் பள்ளியில் சேர்த்தல் மற்றும் தொடர்ந்து பள்ளிக்கு வருவதை உறுதிசெய்தல்.

2. பள்ளிக்குச் செல்லதா, இடைநின்றக் குழந்தைகளைக் கண்டறிந்து வயதிக்கேற்ற வகுப்பில் சேர்த்துக் கண்காணித்தல்.

3. பள்ளியில் படிக்கும் குழந்தைகளின் பெற்றோருக்கு இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

4. மாற்றுத்திறன் குழந்தைகளைக் கண்டறிந்து அவர்கள் பள்ளியில் சேர்ந்து கல்வி கற்கத் தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தொடக்கக் கல்வியினை நிறைவு செய்வதை உறுதிசெய்தல்.

5. குழந்தைகளின் கல்வி மற்றும் முன்னேற்றங்களை உறுதிசெய்தல். பள்ளி வளர்ச்சி தொடர்பான

6. உள்ளாட்சி அமைப்பு மற்றும் வேறு மூலங்களியிலிருந்து கிடைக்கும் நிதி ஒதுக்கீடுகளை இருத்தல். முறையாகப் பயன்படுத்துவதற்கு உறுதுணையாக

7. பள்ளியில் காலை சிற்றுண்டி, மதிய உணவு திட்டம் முறையாகச் செயல்பட ஆலோசனை வழங்குதல்:

8. கிராமசபைக் கூட்டங்களில் கலந்து கொண்டு பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் இயற்றப்பட்டத் திர்மானங்களை சமர்பித்து பள்ளியை அனைத்து அம்சங்களிலும் தன்னிறைவு பெற்றப் பள்ளியாக மாறுவதற்கு உதவுதல்

9. குழந்தைகளின் அடைவுத் திறனை அறிந்துகொள்ளவும் மேம்படுத்தவும் ஆசிரியருடன் கலந்துரையாடுதல்.

10. பள்ளி வளாகத்தைத் தூய்மை மற்றும் பாதுகாப்பை உறுதிசெய்ய உதவுதல்

11. பள்ளிக்குத் தேவையானப் பொருளுதவி, மனிதவளம் சார்ந்த உதவிகளைத் தொடர்ந்து வழங்குதல்.

12. புரவலர் திட்டத்தில் ஆர்வமுள்ளவர்களைச் வழிகாட்டுதலோடு பள்ளி வளர்ச்சிக்கு உதவுதல். சேர்த்து அரசின்

13. மாதந்தோறும் முதல் வெள்ளிக்கிழமை நடைபெறும். பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டங்களில் தவறாமல் பங்கேற்றல்.

14. பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு முடித்துத் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு உயர்வழி கல்வி படிப்பதற்கும், தோல்வி அடைந்த மாணவர்களுக்குத் தொடர்ந்துத் தேர்ச்சிப் பெற தலைமையாசிரியருடன் இணைந்து செயல்படுதல்.

15. மாணவர்கள் நலன் கருதி பள்ளி வளாகத்திற்கு வெளியே, அருகே புகையிலை உள்ளிட்ட போதைப்பொருள் விற்பனை செய்வதை தடைசெய்தல்.

## 8.பள்ளி மேம்பாட்டுத்திட்டம்

### 8.1.பள்ளி மேம்பாட்டுத் திட்டம் என்றால் என்ன ?

பள்ளி மேலாண்மைக் குழுவில் உள்ள உறுப்பினர்கள் உருவாக்குவதுதான் இந்த "பள்ளி மேம்பாட்டுத் திட்டம்". கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கும் பள்ளியை மேம்பத்துவதற்கும் அடிப்படையில் ஒரு முக்கியக் கருவியாகத் திகழ்கிறது.

நிதியாண்டு முடிவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னால், பள்ளி மேலாண்மைக் குழுவினர் ஒன்றுகூடி, அடுத்த மூன்றாண்டு கழித்து நம் பள்ளி எப்படிப்பட்ட வளர்ச்சியை பெற்றிருக்கவேண்டும் ? அதற்கு என்னவெல்லாம் தேவை இருக்கிறது ? என்பதை குறித்தெல்லாம் கூடிப் பேசி, கலந்துரையாடி உருவாக்குவதுதான் இந்தப் "பள்ளி மேம்பாட்டுத் திட்டம்".

## 9. ஆய்வின் தேவை :

பள்ளிப்பார்வையின் போதும் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தில் கலந்துகொள்ளும் போதும் பல தலைமையாசிரியர்கள் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் முறையாக கூட்டத்திற்கு வருவதில்லை, பள்ளி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதில்லை போன்ற கருத்துகளை வலியுறுத்தி கூறினார்கள்.

பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களை பள்ளி வளர்ச்சிக்கு முழுமையாக பயன்படுத்தும் திறன்களை தலைமையாசிரியர்களிடம் மேம்படுத்தும் பொருட்டு இந்த தலைப்பை செயலாராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஆகவே இந்த செயலாராய்ச்சி வழியே தலைமையாசிரியர்கள் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுடன் நல்லுறவை உருவாக்கவும், பள்ளி வளர்ச்சிக்கான பொதுவான இலக்கை அடைய அவர்களுடன் இணைந்து செயல்படவும் இச்செயலாராய்ச்சி பங்களிக்கிறது.

இந்த செயலாராய்ச்சியின் முடிவுகள் தலைமையாசிரியர்கள் புதிய பல உத்திகளை மற்றும் முயற்சிகளை முன்னெடுத்து செல்ல உதவிகரமாக இருக்கும்.

## 10. ஆய்வின் குறிக்கோள் :

சில குறிப்பிட்ட நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கு பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களை பள்ளி வளர்ச்சிக்கு பயன்படுத்தும் திறன்களை மேம்படுத்துதல்.

- பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்திற்கு பெற்றோர்களை 100% வரவழைத்தல்.
- பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களின் அதிகார வரம்புகளை முழுமையாக புரிய வைத்தல்.
- பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் கூட்டத்திற்கு வருவதற்கு உள்ள இடையூறுக்கான காரணிகளை களைதல்.
- பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களைக் கொண்டு பள்ளியை முழுமையான வளர்ச்சிக்கு பயன்படுத்தும் சூழலை அமைத்தல்.

இதன் மூலம் மேற்காணும் குறிக்கோள்களை செயலாராய்ச்சியின் மூலம் நிறைவேற்றுதல்.

## 11. பிரச்சனையைக் கண்டறிதல் :

பள்ளிப்பார்வையின் போதும் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தில் கலந்துகொள்ளும் போதும் பல தலைமையாசிரியர்கள் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் முறையாக கூட்டத்திற்கு வருவதில்லை. பள்ளி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதில்லை போன்ற கருத்துகளை வலியுறுத்தி கூறினார்கள்.

பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களை பள்ளி வளர்ச்சிக்கு முழுமையாக பயன்படுத்தும் திறன்களை தலைமையாசிரியர்களிடம் மேம்படுத்தும் பொருட்டு இந்த தலைப்பை செயலாராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஆகவே இந்த செயலாராய்ச்சி வழியே தலைமையாசிரியர்கள் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுடன் நல்லுறவை உருவாக்கவும், பள்ளி வளர்ச்சிக்கான பொதுவான இலக்கை அடைய அவர்களுடன் இணைந்து செயல்படவும் உதவிகரமாக இருக்கும்.

**12. பிரச்சனையை வரையறுத்தல் :**

பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் பள்ளிச்சார்ந்த வளர்ச்சிக்கு நடைபெறும் கூட்டங்களில் பல நேரங்களில் முழுமையாக அனைவரும் பங்கு பெறுவதில்லை.

பல தலைமையாசிரியர்கள் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதில் இடர்படுகின்றனர். பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தை வெற்றிகரமாக நடத்தும் வழிமுறைகளை இச்செயலாராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

**13. பிரச்சனையைப் பகுத்தாய்தல் :**

நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கு பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களை பள்ளிச் சார்ந்த வளர்ச்சிக்கு பங்குபெறச் செய்வது குறித்து ஆசிரியர்களிடம் விவாதிக்கப்பட்டது.

இந்த செயலாராய்ச்சி ஆய்வுக்காக கெங்கவல்லி ஒன்றியத்தில் கீழ்க்கண்ட பள்ளிகளில் பணியாற்றும் தலைமையாசிரியர்களிடம் இதுகுறித்து விவாதித்து விளக்கப்பட்டது.

**14. பிரச்சனைக்குரிய உத்தேச காரணங்கள் :**

மேற்கண்ட செயலாய்வில் ஆசிரியர்களிடம் கேட்கப்பட்ட கேள்விகளின் அடிப்படையில் மற்றும் கீழ்க்கண்ட உத்தேச காரணங்களுக்காக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**14.1. உத்தேச காரணங்கள் :**

1. பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுடன் திறம்பட தொடர்புகொள்வதில் சிரமம்.
2. பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களின் பங்களிப்பை ஊக்குவிப்பதில் சிரமம்.
3. பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு போதுமான பயிற்சி மற்றும் ஆதரவை வழங்குவதில் சிரமம்.
4. பள்ளி நிர்வாகம் மற்றும் பள்ளி வளர்ச்சிக்கான திட்டங்களை விவாதிக்க வழக்கமான கூட்டங்களை நடத்துவதில் சிரமம்.
5. பள்ளி மேலாண்மைக் குழுவின் பங்கு மற்றும் பொறுப்புகள் பற்றி பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் சமூக உறுப்பினர்களிடையே போதுமான விழிப்புணர்வு இல்லாமல் இருத்தல்.
6. பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் தங்கள் பணிகளில் ஆர்வம் காட்டாமல் இருத்தல்.

7. பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள், பள்ளி நிர்வாகம் மற்றும் சமூகத்தினருக்கு இடையே போதுமான ஒருங்கிணைப்பு இல்லாமல் இருத்தல்.
8. பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு தேவையான பயிற்சி மற்றும் வழிகாட்டுதல் வழங்கப்படாமல் இருத்தல்.

மேற்கூறிய காரணங்கள் அனைத்தும் உத்தேசக் காரணங்களாகக் கருதி இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**15. கருதுகோள்கள் :**

1. இச்செயலாராய்ச்சியின் இடையீட்டு நிகழ்விற்கு பின் நடுநிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுடன் நல்லுறவை உருவாக்கும் திறன்களைப் பெறுவர்.

2. பயிற்சி பெற்ற பின் தலைமையாசிரியர்கள் அப்பயிற்சியின் மூலமாக பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களை முழுமையாக பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தில் பங்குபெறச் செய்ய இயலும் என்று நம்புகின்றனர்.

3. பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களை பள்ளி வளர்ச்சிக்கு முழுமையாக பயன்படுத்தும் திறன்களை பெறுவதன் மூலம் பள்ளி வளர்ச்சிக்கான பொதுவான இலக்கை அடைய முடியும் என தலைமையாசிரியர்கள் நம்புகின்றனர்.

**16. ஆய்வு மாதிரி :**

ஆய்வுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட கெங்கவல்லி ஒன்றியத்தில் உள்ள கீழ்க்கண்ட 2 மேல்நிலைபள்ளிகள், 2 உயர்நிலைப்பள்ளிகள், 8 நடுநிலைப்பள்ளிகள், 3 தொடக்கப்பள்ளிகள் மொத்தம் 15 தலைமையாசிரியர்களிடம் இதனை குறித்து விவாதிக்கப்பட்டது.

1. அ.ஆ.மே.நி.பள்ளி, கெங்கவல்லி
2. அ.மே.நி.பள்ளி, கொண்டையம்பள்ளி
3. அ.உ.நி.பள்ளி, கடம்பூர்
4. அ.உ.நி.பள்ளி, நடுவலூர்
5. ஊ.ஒ.ந.பள்ளி, தண்ணீர் தொட்டி, தம்மம்பட்டி
6. ஊ.ஒ.ந.பள்ளி, நாகியம்பட்டி
7. ஊ.ஒ.ந.பள்ளி, தம்மம்பட்டி (மெயின்)
8. ஊ.ஒ.ந.பள்ளி, காந்தி நகர், தம்மம்பட்டி
9. ஊ.ஒ.ந.பள்ளி, 74,கிருஷ்ணாபுரம்
10. ஊ.ஒ.ந.பள்ளி, 10வது வார்டு, கெங்கவல்லி
11. ஊ.ஒ.ந.பள்ளி, ஆணையாம்பட்டி
12. ஊ.ஒ.ந.பள்ளி, ஒதியத்தூர்
13. ஊ.ஒ.தொ.பள்ளி, 2வது வார்டு, கெங்கவல்லி
14. ஊ.ஒ.தொ.பள்ளி, கடம்பூர்
15. ஊ.ஒ.தொ.பள்ளி, தெடாவூர் மேற்கு

**17. ஆய்வு வடிவம் :**

1. தனிக்குழு பரிசோதனை முறை
2. முன்தேர்வு
3. பயிற்சி அளித்தல்
4. பின்தேர்வு

**18. செயல்பாடுகளைத் திட்டமிடுதல் :**

செயலாய்விற்காக தலைமையாசிரியர்களிடம் கேட்கப்பட்ட கேள்விகளில், அவர்களிடமிருந்து பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களை பள்ளி வளர்ச்சிக்கு முழுமையாக பயன்படுத்தும் திறனும் மற்றும் பயிற்சியும் போதிய அளவு இல்லை என்பது கண்டறியப்பட்டது.

தலைமையாசிரியர்கள் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுடன் நல்லுறவை உருவாக்கவும், பள்ளி வளர்ச்சிக்கான பொதுவான இலக்கை அடையவும் தலைமையாசிரியர்கள் தங்கள் திறனை வளர்த்துக் கொள்ள இந்த கீழ்க்கண்ட செயல்பாடுகள் உதவி புரிகிறது.

**19. இடையீட்டு நிகழ்வு :**

**15** பள்ளிகளைச் சார்ந்த தலைமையாசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டதன் மூலம் தலைமையாசிரியர்கள், பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களை பள்ளி வளர்ச்சிக்கு முழுமையாக பயன்படுத்துதல் தொடர்பாக கீழ்க்கண்ட திறன்களை பெற்றனர்.

- பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுடன் நல்லுறவை உருவாக்குதல்.
- பள்ளி வளர்ச்சிக்கான பொதுவான இலக்கை அடைய பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுடன் இணைந்து செயல்படுதல்.
- தலைமையாசிரியர்கள் ஒரு நேர்மறையான மற்றும் ஊக்கமளிக்கும் அணுகுமுறையைக் கொண்டிருத்தல்.
- பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களை ஒன்றிணைத்து பொதுவான இலக்கை நோக்கி வழிநடத்த தலைமை ஆசிரியர்கள் திறமையான தலைவர்களாக இருத்தல்.
- பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் பள்ளி நிர்வாகம் மற்றும் முடிவெடுப்பதில் தீவிரமாக பங்கேற்க தூண்டுதல்.

## 20. நுட்பங்கள் :

தலைமையாசிரியர்களுக்கு வைக்கப்பட்ட முன்தேர்விலிருந்து பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களை பள்ளி வளர்ச்சிக்கு முழுமையாக பயன்படுத்துவதில் உள்ள பிரச்சனைகள் அறிந்துக்கொள்ளப்பட்டது. முன்தேர்வு, பயிற்சி, பின்தேர்வு முறைகள் கையாளப்பட்டது. பின்னர் தலைமையாசிரியர்களுக்கு பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களை பள்ளி வளர்ச்சிக்கு பயன்படுத்தும் திறனை மேம்படுத்தும் பயிற்சி முறைகள் கையாளப்பட்டது.

## 21. தலைமையாசிரியர்கள் திறன் வளர்த்தல் பயிற்சி :

முன்தேர்வின் அடிப்படையில் ஆசிரியர்களுக்கு கீழ்க்கண்ட உத்திகளின் படி பயிற்சி அளிக்கப்பட்டது.

- உறுப்பினர்களுக்கு ஏதுவான நேரத்தில் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம் நடத்துதல்.
- பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தை பொதுவான இடத்தில் நடத்துதல்.
- தலைமையாசிரியர்களிடம் சுய ஊக்குவிப்பு திறன் ஏற்படுத்துதல்.
- உறுப்பினர்களின் சூழ்நிலையிலிருந்து புரிந்து அதற்கேற்றவாறு சூழலை ஏற்படுத்துதல்.
- பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தின் அதிகார வரம்புகளை புரிய வைத்தல்

- பள்ளி மாணவர்களின் நலன், பள்ளி வளர்ச்சி நலன் தொடர்பான சிந்தனைகளை மேம்படுத்துதல்.
- அனைத்து பள்ளி மேலாண்மைக் குழு கூட்டங்களிலும் பங்குபெறும் உறுப்பினர்களுக்கு சான்றிதழ், பாராட்டு வழங்குதல்.
- பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் பள்ளி வளர்ச்சி சார்ந்து உயர் அலுவலர்களை சந்திக்கும் சூழலை உருவாக்குதல்.
- பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்திற்கு வட்டார அளவில் உள்ள உயர் அலுவலர்களை வரவழைத்தல்.
- திறம்பட சமூகத்தொடர்பு கொள்ளும் திறன் வளர்த்தல்.
- பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுடன் நல்லுறவை உருவாக்குதல், அதனை பராமரித்தல்.
- தலைமையாசிரியர்கள் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு பள்ளி வளர்ச்சி சார்ந்த தங்கள் கருத்துகளை தெளிவாகவும் சுருக்கமாகவும் தெரிவித்தல்.
- பள்ளி வளர்ச்சிக்கான பொதுவான இலக்கை அடைய பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுடன் இணைந்து செயல்பட தலைமையாசிரியர்கள் ஒரு நேர்மறையான மற்றும் ஊக்கமளிக்கும் அணுகுமுறையைக் கொண்டிருத்தல்.
- தலைமையாசிரியர்கள் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களின் கருத்துக்களைக் கேட்டல், அதற்கு மதிப்பளித்தல்.

- தலைமையாசிரியர்கள் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு கருத்து தெரிவிக்கவும் பங்களிக்கவும் வாய்ப்புகளை வழங்குதல்.
- பள்ளி மேலாண்மை குழுவின் உறுப்பினர்களுக்கு தெளிவான பொறுப்புகளை ஒதுக்குதல்.
- பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு போதுமான பயிற்சி மற்றும் ஆதரவை வழங்குவதற்கான சூழலை உருவாக்குதல்.
- பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் பள்ளி நிர்வாகம் மற்றும் பள்ளி வளர்ச்சிக்கான திட்டங்களை விவாதிக்க வழக்கமான கூட்டங்களை நடத்தி அவர்களை பள்ளிப்பார்வையிட வைத்து தனிப்பதிவேட்டில் பள்ளிப்பார்வை சார்ந்த நிறை, குறைகளை எழுத ஊக்குவித்தல்.
- பள்ளி சார்ந்த நடைமுறை விதிகள், பள்ளி நிதி மற்றும் பள்ளி வளர்ச்சி பற்றி தலைமையாசிரியர்களுக்கு நல்ல புரிதல் இருத்தல்.
- பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு பள்ளி நிர்வாகம் மற்றும் பள்ளி வளர்ச்சி தொடர்பான பல்வேறு தலைப்புகளில் பயிற்சிகள் வழங்குதல்.
- பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் மற்றும் தலைமையாசிரியர்கள் ஆகியோர்களுக்கு ஒருவருக்கொருவர் நம்பிக்கை இருத்தல்.

- பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களை பள்ளி நிர்வாகம் மற்றும் முடிவெடுப்பதில் தீவிரமாக பங்கேற்க தூண்டுதல்.
- பள்ளி மேலாண்மை குழுவின் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களை பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு தெளிவாக வரையறுத்தல்.
- பள்ளி மேலாண்மை குழு, பள்ளி தலைமையாசிரியர் மற்றும் சக ஆசிரியர்கள் ஆகியோர் தங்களுக்குள் நல்லுறவு பள்ளி வளர்ச்சி ஒரு குழுவாக செயல்படுதல்.
- தலைமையாசிரியர்கள் சமூக நிகழ்வுகளில் பங்கு பெறுதல்.

**22. விவர சேகரிப்பும், பகுப்பாய்வும் :**

இந்த செயலாராய்ச்சியின் ஆய்வில் தலைமையாசிரியர்களிடம் இருந்து கலந்துரையாடல் மற்றும் முன்தேர்வு மூலம் பெறப்பட்ட தகவல்கள் மற்றும் பின்தேர்வு மூலம் பெறப்பட்ட தரவுகள் பகுப்பாய்வுகள் மூலம் வெளி கொணரப்பட்டது. இந்த ஆய்வுகள் சேகரிக்கப்பட்ட தரவுகள் மற்றும் தகவல்கள் ஆய்வாளர் மூலம் ஆய்வு செய்யப்பட்டு முறையாக அவர்களின் பதிலை பயன்படுத்தி அனைத்து தலைமையாசிரியர்களும் அவர்களின் கற்பித்தல் முறையின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

ஆய்வில் பங்கேற்ற அனைத்து தலைமையாசிரியர்களும் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களை பள்ளி வளர்ச்சிக்கு முழுமையாக பயன்படுத்தும் திறன்கள் மேம்பட்டுள்ளது என்று பகுப்பாய்வு செய்யப்பட்டனர்.

## 23. அட்டவணை :

முன்தேர்வு, பின்தேர்வு மதிப்பெண்கள் அட்டவணைப்படுத்தப்பட்டு அதாவது ஒப்பீடு செய்யப்பட்டு முன்னேற்ற விபரம் பெறப்பட்டது. அந்த மதிப்பெண்கள் மூலம் வரைபடம் வரைந்து முன்தேர்வை விட பின்தேர்வில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பது அறியப்பட்டது.

$$\text{முன்தேர்வு சராசரி மதிப்பெண்கள்} = \frac{\text{மொத்த மதிப்பெண்கள்}}{\text{மொத்த ஆசிரியர்கள்}}$$

$$= \frac{541}{15} = 36.07$$

$$\text{பின்தேர்வு சராசரி மதிப்பெண்கள்} = \frac{\text{மொத்த மதிப்பெண்கள்}}{\text{மொத்த ஆசிரியர்கள்}}$$

$$= \frac{1306}{15} = 87.07$$

முன்தேர்வு சராசரி = **36.07**

பின்தேர்வு சராசரி = **87.07**

இதிலிருந்து முன்தேர்வு சராசரி மதிப்பெண்களைக் காட்டிலும் பின்தேர்வில் சராசரி மதிப்பெண்கள் அதிகமாகவே உள்ளது என்பது கண்டறியப்பட்டுள்ளது. இது பல்வேறு செயல்பாடுகள் மற்றும் புதிய உளவியல் பயிற்சிகள் மூலமாக தலைமையாசிரியர்கள் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களை பள்ளி வளர்ச்சிக்கு முழுமையாக பயன்படுத்தும் திறன் மேம்பட்டுள்ளது என்பதை தெளிவாகக் காட்டுகிறது.

**24.ஆய்வு முடிவு :**

இந்த செயலாராய்ச்சியின் மூலம் தலைமையாசிரியர்கள் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களை பள்ளி வளர்ச்சிக்கு முழுமையாக பயன்படுத்தும் திறன் மேம்பட்டுள்ளது என்பதை இந்த ஆய்வு தெளிவுபடுத்துகின்றது.

இந்த ஆய்வில் பங்குபெற்ற தலைமையாசிரியர்கள் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுடன் நல்லுறவை உருவாக்கவும், பள்ளி வளர்ச்சிக்கான பொதுவான இலக்கை அடைய அவர்களுடன் இணைந்து செயல்படும் திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

## 25.பரிந்துரைகள் :

இந்த செயலாராய்ச்சியின் கண்டுபிடிப்பிலிருந்து, தலைமையாசிரியர்கள் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களை பள்ளி வளர்ச்சிக்கு முழுமையாக பயன்படுத்துவது மிக அவசியம் என்று கருதப்படுகின்றது.

ஒவ்வொரு பள்ளிகளிலோ அல்லது பொதுவான இடங்களிலோ வாரம் ஒருமுறை அல்லது மாதம் இருமுறை பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம் நடத்தப்படுவதன் மூலம் தரமான கல்வியை வழங்குவதற்கும், எதிர்கால தலைமுறையை உருவாக்குவதற்கும் வழிகாட்டப்பட வேண்டும்.

பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தில் தவறாமல் கலந்துகொள்ளும் உறுப்பினர்கள் அனைவருக்கும் பாராட்டு சான்றிதழ் வழங்க வேண்டும். பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு ஆறு மாதம் அல்லது வருடத்திற்கு ஒருமுறை உழைப்பூதியம் தரும் வாய்ப்பை ஏற்படுத்தித்தர வேண்டும்.

பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு SMC பயிற்சி வழங்கும் போது அனைவரும் கலந்துகொள்ளும் வகையில் விடுமுறை நாட்களில் வைப்பதற்கு உரிய சூழலை உருவாக்குதல்.

பள்ளி மாணவர் சேர்க்கை முதல் கோடை விடுமுறை வரை பள்ளி சார்ந்த அனைத்து நிகழ்வுகளிலும் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு உரிய அங்கீகாரம் வழங்குதல், ஆலோசனை பெறுதல்.

**26.ஆய்விற்காக துணைநின்ற நூல்கள் :**

1. பள்ளி மேலாண்மைக் குழு பயிற்சி கட்டகம்
2. தலைமைப் பண்பு பற்றிய மெய்யறிவு – ராபின் ஷர்மா
3. கற்றல்–மனிதவளர்ச்சி–உளவியல்–குமரிச்செழியன்
4. ஆல் இஸ் வெல் – டாக்டர்.அபிலாஷா

## பின் இணைப்பு – 1

## முன்தேர்வு, பின்தேர்வு

## தலைமையாசிரியர்களின் மதிப்பெண் பட்டியல்

| வரிசை எண். | பள்ளியின் பெயர் | ஆசிரியர்களின் பெயர் | முன்தேர்வு மதிப்பெண் | பின்தேர்வு மதிப்பெண் |
|---|---|---|---|---|
| 1. | அ.ஆ.மே.நி.பள்ளி, கெங்கவல்லி | சாமுவேல் | 37 | 80 |
| 2. | அ.மே.நி.பள்ளி, கொண்டையம்பள்ளி | கி.மதிவாணன் | 37 | 91 |
| 3. | அ.உ.நி.பள்ளி, கடம்பூர் | செல்வம் | 37 | 85 |
| 4. | அ.உ.நி.பள்ளி, நடுவலூர் | நடராஜன் | 33 | 87 |
| 5. | ஊ.ஒ.ந.பள்ளி, தண்ணீர் தொட்டி, தம்மம்பட்டி | ஆ.அபிராமி | 30 | 90 |
| 6. | ஊ.ஒ.ந.பள்ளி, நாகியம்பட்டி | இராமகிருஷ்ணன் | 40 | 85 |
| 7. | ஊ.ஒ.ந.பள்ளி, தம்மம்பட்டி (மெயின்) | அன்பழகன் | 35 | 89 |
| 8. | ஊ.ஒ.ந.பள்ளி, காந்தி நகர், தம்மம்பட்டி | தேவகஸ்தூரி | 38 | 85 |
| 9. | ஊ.ஒ.ந.பள்ளி, 74,கிருஷ்ணாபுரம் | பொன்னி | 41 | 90 |
| 10. | ஊ.ஒ.ந.பள்ளி, 10வது வார்டு, கெங்கவல்லி | வெற்றிச்செல்வி | 34 | 84 |
| 11. | ஊ.ஒ.ந.பள்ளி, ஆணையாம்பட்டி | ஐ.சின்னையன் | 37 | 88 |
| 12. | ஊ.ஒ.ந.பள்ளி, ஒதியத்தூர் | மு.பாத்திமாபீவி | 36 | 86 |
| 13. | ஊ.ஒ.தொ.பள்ளி, 2வது வார்டு, கெங்கவல்லி | க.அன்பழகி | 36 | 87 |
| 14. | ஊ.ஒ.தொ.பள்ளி, கடம்பூர் | ஜெயமணி | 36 | 91 |
| 15. | ஊ.ஒ.தொ.பள்ளி, தெடாவூர் மேற்கு | ஏ.செல்வி | 34 | 88 |
| | | | 541 | 1306 |

## பின் இணைப்பு – 2


## முன்தேர்வு, பின்தேர்வு

## ஓர் ஒப்பீடு

| வரிசை எண். | மதிப்பெண் இடைவெளி | முன்தேர்வு ஆசிரியர்களின் எண்ணிக்கை | பின்தேர்வு ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | 0–10 | 00 | 00 |
| 2. | 11–20 | 00 | 00 |
| 3. | 21–30 | 01 | 00 |
| 4. | 31–40 | 12 | 00 |
| 5. | 41–50 | 02 | 00 |
| 6. | 51–60 | 00 | 00 |
| 7. | 61–70 | 00 | 00 |
| 8. | 71–80 | 00 | 01 |
| 9. | 81–90 | 00 | 12 |
| 10. | 91–100 | 00 | 02 |


## பின் இணைப்பு – 3

### ஆசிரியர்களிடையேயான முன், பின் தேர்வு வேறுபாடு



**பின் இணைப்பு – 4**

**அடைவுத்திறன் – ஓர் ஒப்பீடு**



## பின் இணைப்பு – 5

## செயலாய்வு தொடர்பான புகைப்படத்தொகுப்பு

### தலைமைசிரியர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கு முன் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம்

**இடம்: ஊ.ஒ.ந.பள்ளி, 74,கிருஷ்ணாபுரம்**






SHOT ON MI A1
MI DUAL CAMERA



## இடம்: ஊ.ஒ.ந.பள்ளி, 10வது வார்டு, கெங்கவல்லி








**இடம்: அ.உ.நி.பள்ளி, கடம்பூர்**






பள்ளி மேலாண்மைக் குழு
ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி
கடம்பூர்.

## பள்ளி தலைமையாசிரியர்களுக்கு ஒரு நாள் சிறப்பு பயிற்சி வழங்கிய நிகழ்வு





தலைமைசிரியர்களுக்கு பயிற்சி வழங்கியதற்கு பின்
பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம்

இடம்: ஊ.ஒ.ந.பள்ளி, நாகியம்பட்டி












SHOT ON MI A1
MI DUAL CAMERA

இடம்: ஊ.ஒ.ந.பள்ளி, 10வது வார்டு, கெங்கவல்லி



இடம்: அ.உ.நி.பள்ளி, கடம்பூர்







**இடம்: ஊ.ஒ.ந.பள்ளி, தம்மம்பட்டி (மெயின்)**







2009 - 2010.


அனைவருக்கும் கல்வி இயக்கம்.
மூன்று வகுப்பறை கட்டிடம்.
2009 - 2010.
CRL CENTRE

**இடம்: ஊ.ஒ.ந.பள்ளி, 74,கிருஷ்ணாபுரம்**









## பின் இணைப்பு – 6
## முன்தேர்வு / பின்தேர்வு

தலைமையாசிரியர் பெயர் :
பள்ளியின் பெயர் :

| | |
|---|---|
| 1. | பள்ளி மேலாண்மைக் குழு என்றால் என்ன ? |
| 2. | பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் யார் ?யார் ? |
| 3. | பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு உள்ள பணிகள் என்னென்ன ? |
| 4. | பள்ளி மேலாண்மைக் குழுவின் நோக்கம் என்ன ? |
| 5. | பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களை பள்ளி வளர்ச்சிக்கு முழுமையாக பயன்படுத்துவது குறித்து உங்கள் கருத்து ? |

| | | |
|---|---|---|
| 6. | தலைமைத்துவப் பண்பு குறிப்பு தருக ? | |
| 7. | பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தை பொதுவான இடத்தில் நடத்துகிறீர்களா ? | ஆம்/இல்லை |
| 8. | உறுப்பினர்களுக்கு ஏதுவான நேரத்தில் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம் நடத்துகிறீர்களா ? | ஆம்/இல்லை |
| 9. | பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு போதுமான பயிற்சி வழங்குககிறீர்களா ? | ஆம்/இல்லை |
| 10. | பள்ளி மேலாண்மைக் குழு கூட்டங்களில் பங்குபெறும் உறுப்பினர்களுக்கு சான்றிதழ், பாராட்டு வழங்குகிறீர்களா ? | ஆம்/இல்லை |
| 11. | தலைமையாசிரியர்கள் சமூக நிகழ்வுகளில் பங்கு பெறுகிறீர்களா ? | ஆம்/இல்லை |
| 12. | பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள், பள்ளி நிர்வாகம் மற்றும் சமூகத்தினருக்கு இடையே போதுமான ஒருங்கிணைப்பு உள்ளதா ? | ஆம்/இல்லை |
| 13. | பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் தங்கள் பணிகளில் ஆர்வம் காட்டுகிறார்களா ? | ஆம்/இல்லை |
| 14. | பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு தேவையான வழிகாட்டுதல் வழங்கப்படுகிறதா ? | ஆம்/இல்லை |
| 15. | பள்ளி மேலாண்மைக் குழுவின் பங்கு மற்றும் பொறுப்புகள் பற்றி பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் சமூக உறுப்பினர்களிடையே போதுமான விழிப்புணர்வு உள்ளதா ? | ஆம்/இல்லை |